Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No. 92/2024

**Deposition of P.W.3**

| | | |
|---|---|---|
| Name | : | சுகன் |
| Father's Name | : | வெங்கிடாச்சலம் |
| Village | : | அனவயல் |
| Age | : | **35 /2025** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 14.10.2025**
(1ஆம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜர். 2 முதல் 6 எதிரிகள் ஆஜர் இல்லை. 2 முதல் 6 எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 317ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது)

<u>முதல்விசாரணை</u>

நான் ஆலங்குடி தாலுகா அனவயல் கிராமத்தில் குடியிருந்து வந்து தனியார் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னடையதுதான். சுமார் 1 வருடத்திற்கு முன்னர் ஒருநாள் மாங்காட்டில் உள்ள பூச்சிக்கடை அருகே உள்ள தேனீர் கடை அருகே போலிசார் விசாரணை செய்தார்கள். போலிசார் கேட்டதால் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியானவர் பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை )

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

கடந்த 27.05.2024 அன்று போலிசார் எதிரி அமிர்தராஜன் வீட்டின் அருகே வந்து விசாரணை செய்து வரைபடம் வரைந்தபோது நான் சாட்சியாக உடன் இருந்து பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

நான் அ.சா.ஆ.2 பார்வை மகஜர் ஆவணத்தில் மாங்காடு பூச்சிகடை தேனீர் கடையில் வைத்துதான் கையொப்பம் செய்தேன். அனவயல் 1ஆவது எதிரி வீட்டின்

முன்பு எந்தவிதமான ஆவணத்திலும் கையொப்பம் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

மறு விசாரணை இல்லை.